அனுப்புநர்:

திரு. P. வடிவேலன். D.T.Ed., B.Com., M.A., B.Ed., S.D.T.B.

தலைமை ஆசிரியர்

பார்வைத்திறன் குறையுடையோருக்கான

அரசு நடுநிலைப் பள்ளி,

புதுகோட்டை - 622001

பெறுநர்

நிலைய இயக்குனர்

புதுகை பண்பலை 91.2

சமுதாய வானொலி

புதுக்கோட்டை

ந.க.எண். 34/சிப/2024.

நாள்: 06.05.2024

அய்யா,

பொருள்: மாற்றுத்திறனாளிகள் நலன் - சிறப்புப்பள்ளிகள் - பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப்பள்ளி புதுக்கோட்டை – பார்வைத்திறன் குறையுடைய மாணவர்களை பள்ளியில் சேர்க்க செய்தி வெளியிட கோருதல் - சார்பு

புதுக்கோட்டை பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளியில் 2024 - 25ஆம் கல்வியாண்டில் 24 பார்வை குறையுடைய மாற்றுத்திறனாளி மாணவர்கள் படித்து வருகிறார்கள். மேலும் இதுபோன்ற சிறப்பு மாணவர்களை புதுக்கோட்டை பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளியில் சேர்க்க தங்கள் புதுகை பண்பலை சமுதாயம் வானொலியில் செய்தி வெளியிட வேண்டுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ப- வடிவே 06/05/24

தலைமை ஆசிரியர்
பார்வைத்திறன் குறையுடையோருக்கான
அரசு நடுநிலைப்பள்ளி
புதுக்கோட்டை - 622 001.

இணைப்பு:

1. செய்தி குறிப்பு

பார்வைதிறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளியில் 2024-25 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது.

பள்ளியைப்பற்றி.

பார்வைதிறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளியில் பார்வைத்திறன் குறையுடைய மாணவர்கள் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை விடுதியிலேயே தங்கி படிக்கலாம். இந்த பள்ளியானது தமிழக அரசு முதலமைச்சர் அவர்களின் நேரடியான மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் செயல்படும் அரசு சிறப்பு பள்ளியாகும். 1975-76 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டு தொடர்ந்து பார்வை குறைபாடுடைய மாணவர்களுக்கு மிக சிறப்பாக கல்வி வழங்கி வருகிறது. நம்பள்ளியில் படித்து இன்று பலர் அரசு துறைகளில் கல்லூரி பேராசிரியர்களாகவும், பள்ளி தலைமை ஆசிரியர்களாகவும், ஆசிரியர்களாகவும், அரசு அலுவலர்களாகவும் இருக்கிறார்கள் மேலும் தனியார் துறைகளிலும் பணிபுரிகிறார்கள் என்பது நம் பள்ளிக்கு பெருமை,

சிறப்பு கல்வி

1. தமிழக முதலமைச்சர் அவர்களின் நேரடியான துறை
2. சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்
3. இணையதளம் வசதி கொண்ட நவீன வகுப்பறை
4. மாணவர்களுக்கு சிறப்பு கணினி வகுப்பு
5. பிரெய்லி எழுத படிக்க கற்று தரப்படும்
6. மாணவர்களுக்கு பிரெய்லி நூலகம் வசதி
7. இலவச பிரெய்லி பாட புத்தகங்கள், கணித உபகரணங்கள் அரசு மூலம் வழங்கப்படும்
8. CCTV மூலம் பள்ளி வளாகம் கண்காணிக்கப்படுகிறது
9. விளையாட்டு முறையிலும், கணினி முறையிலும் மாணவர்களுக்கு கல்வி கற்றுக் தரப்படுகிறது.
10. மாணவர்களுக்கு பாடல், இசைக்கருவிகள் வாசிக்க பயிற்சி
11. உடற்பயிற்சி, யோகா போன்ற தன் நலன் பேணுதல் பயிற்சி வழங்கப்படுகிறது
12. சிலம்பம், கராத்தே, போன்ற தற்காப்பு பயிற்சி வழங்கப்படுகிறது
13. மாணவர்களுக்கு பிரத்யேக சிறப்பு கிரிக்கெட், வாலிபால், கால்பந்து போன்ற விளையாட்டுக்கான பயிற்சி
14. மாணவர்களுக்கான பள்ளி சீருடை இலவசம்
15. ஆண்டுக்கு ஒருமுறை கல்வி உதவித் தொகை.
16. ஆண்டுக்கு ஒருமுறை கல்வி சுற்றுலா
17. சத்தான, ஆரோக்கியமிக்க உணவு,
18. சுத்திகரிக்கப்பட்ட RO குடிநீர் வசதி.

19. மாணவர்களுக்கு குளிக்க சூடான தண்ணீர் வசதி.

20. நல்ல காற்றோட்டம் கொண்ட மாணவ, மாணவியர்களுக்கு தனித்தனி விடுதி அறைகள்

21. குழந்தைகளை பராமரிக்கவும், பாதுகாக்கவும் ஆயாக்கள், இரவு காவலர்.

22. சத்தான சமையல் செய்ய பயிற்சி பெற்ற சமையலர்.

23. பள்ளிக்கல்வி துறை வழங்கும் கல்வி உபகரணங்கள் கொண்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

24. தேசிய திறனாய்வு தேர்வுக்கான பயிற்சி

25. மாணவர்களுக்கு எதிர்கால சிறப்பு அஞ்சலக சேமிப்பு திட்டம்

உங்கள் அருகில் உள்ள 5 வயது முதல் 13 வயது வரை உள்ள பள்ளி பருவ மாணவர்கள் 40 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை கண்பார்வையில் குறைபாடு உடையவர்களாக இருந்தால் அவர்களுக்கு என்று இருக்கும் புதுக்கோட்டையில் உள்ள பார்வைதிறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளியில் சேர்ந்து அவர்களை கல்வியில் சிறந்த விளங்கிட தமிழக அரசு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் செயல்படும் இந்த அரசு சிறப்பு பள்ளியில். சேர்த்து பயன்பெற வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்பு எண்கள்.

பார்வை குறைபாடுடைய மாணவர்களை பள்ளியில் சேர்க்க தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்.

+91 9499933248, 04322 226452, +91 9840272383.

தொடர்பு முகவரி.


தலைமை ஆசிரியர்,

பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப்பள்ளி

M.L.A. அலுவலகம் அருகில்,

புதிய பேருந்து நிலையம்,

புதுக்கோட்டை 622 001.


06/05/24

தலைமை ஆசிரியர்
பார்வைத்திறன் குறையுடையோருக்கான
அரசு நடுநிலைப்பள்ளி
புதுக்கோட்டை - 622 001.